RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22212

OPEN ACCESS

# பேரறிஞர் சி.என். அண்ணாதுரையின் கல்விச் சிந்தனைகள்: ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வு

**கு. சின்னப்பன் [அ, *]**

[அ] கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா.

# Educational Thoughts of Perarignar C.N. Annadurai: A Content Analysis

**K. Chinnappan [a, *]**

[a] Department of Education and Management, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India

* Corresponding Author: ku.chinnappan@gmail.com

Received: 22-12-2021
Revised: 11-04-2022
Accepted: 18-04-2022
Published: 26-04-2022

Check for updates

## ABSTRACT

The objective of this paper is to describe the educational thoughts and activities of Perarignar C.N. Annadurai which are present in his writings and speeches. This article uses the descriptive method and content analysis approach to do the study. His progressive thinking on objective of education, plan of education, methods of learning and teaching, instructional language, secular education, and need of educational institutions. The primary source of this article are, books authored by Perarignar C.N. Annadurai and the books written by others on C.N. Annadurai's thoughts on education and associated activities. The betterment of an individual and the social economical cultural and political progress of a nation are constructed based on the education they possess.

**Keywords:** Intellectual Revolution, Concept Revolution, Reasoning, Evolution, Social Darkness, Clan Education

## முன்னுரை

பேறறிஞர் சி. என். அண்ணாதுரை தனது எழுத்தாலும் பேச்சாலும் கருத்துப்புரட்சி செய்தவர். பன்முக ஆளுமை கொண்டவர். உலகறிந்த பேச்சாளர், எழுத்தாளர், சிந்தனையாளர் மற்றும் சிறந்த ஆட்சியாளர். தாய்மொழி மீது தணியாத பற்றுக் கொண்டிருந்தவர். தமிழக அரசியலில் புதிய எழுச்சிக்கான நீதிக்கட்சியிலும், சாதி, மத, பேதமற்ற சமுதாயம் காணப் பெரியாருடன் இணைந்து, திராவிடர் கழகத்திலும் (1936-48) களப்பணியாற்றியவர். பின்னர் 1949-இல் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கியவர். 1935 முதல் தமிழ்மொழி, தமிழ் மரபு, தமிழர் நலம் காக்கப்பட வேண்டுமென்று போராடி தமிழர் வாழ்வைத் தலைநிமிரச் செய்தவர். பல்கலைக்கழகங்களில் தமிழாராய்ச்சி, குறள் ஆராய்ச்சி மையங்களை ஏற்படுத்தியவர். பேறறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களின் கல்விச் சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கற்பித்தல் முறை

ஒருமைப்பாட்டை வளர்க்கவும் மனிதநேயம் வளரவும், வாழ்க்கை சிறக்கவும் நாடு உயரவும் கல்வி அவசியமாகும் என்றார், பேரறிஞர் சி. என். அண்ணாதுரை. ஒரு சமுதாயத்தின் எழுச்சியும்

வீழ்ச்சியும் ஆசிரியர்களின் கையில்தான் இருக்கிறது என்று குறிப்பிடும் பேரறிஞர் சி.என். அண்ணாதுரை, தம்மிடத்தில் படித்த மாணவர்கள் உயர்வதில்தான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு இருக்கிறது என்றார். ஆசிரியர்களுக்குப் பணி நோக்கத்தைவிடப் பண்பு நோக்கம், அறிவுநோக்கம் ஆகிய இரண்டும் மிக முக்கியமென்று வலியுறுத்தினார்.

## பயிற்றுமொழி

தமிழகத்தில் ஆட்சிபுரிந்தோர் ஒன்றிய அரசாங்கத்தைத் திருப்திபடுத்துவதற்கென்று தமிழ்நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார்கள். மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து, நடராஜன் மரணத்தைக் கூட "கல்வியறிவு இல்லாதவர்கள் சிறையிலே செத்துப் போனார்கள் என்று இழித்துரைத்தனர்" (Manickavasagam, 1969). இந்தித் திணிப்பை எதிர்த்து, எல்லோரும் தாய்மொழியில்தான் படிக்கவேண்டுமென்றார். 1967-இல் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றப் பிறகு, 23.01.1968-இல் இந்த நாட்டுப் பள்ளிகளில் இனி மும்மொழித் திட்டம் ஒழிக்கப்படும் என்று ஆணை பிறப்பித்தார். என்.சி.சி அணிவகுப்பில் இந்தி ஆணைச் சொற்கள் கட்டாயம் நீக்கப்படும் என்றும் பிரகடனப்படுத்தினார் (Manickavasagam, 1969). இது ஒவ்வொரு குழந்தையும் தனது தாய்மொழியிலேதான் கல்வி கற்க வேண்டுமென்ற அவரது எண்ணத்தை, வெளிப்படுத்துகிறது. தாய்மொழி வழிக் கல்வியால் மக்களும், நாடும் மேன்மையுற முடியும் என்று நம்பினார். உயர்கல்வியிலும் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்தினார்.

## பாடத்திட்டமும் கல்விமுறையும்

கல்வியை எதற்காகக் கற்கிறோம்? பகுத்தறிவு பெறப் புதிய பொருளைக் காணவே கற்கிறோம். ஆனால், மனிதன் இன்னும் மனிதனாக நடந்துகொள்ள முழுவதும் கற்றுக் கொள்ளவில்லையே, மனிதன் மனிதனாக அறிந்து கொள்வதிலே மட்டும் வெற்றிபெற முடியவில்லையே என்று வருத்தப்பட்டார் (Annadurai, 1995). மனிதருக்குள் பேதத்தைப் புகுத்திடும் பாடத்திட்ட ஏடுகள், அவற்றில் இடம்பெறும் எண்ணங்கள், கல்வி ஏற்பாடுகள் நீக்கப்படவேண்டுமென்று கருதினார். சில சாதிக்குத்தான் படிப்பு வரும், சில சாதிக்குப் படிப்பு வராது என்ற மனிதத்தன்மைக்கு மாறான கருத்துகள் நாட்டிலே பரவாமல் தடுக்கவேண்டும் (Annadurai, 1962). நாட்டிலே அறிவுப்புரட்சி ஏற்படக் குடியாட்சிக் கோட்பாட்டுக்குத் தேவையான கல்விமுறையை மேற்கொண்டாக வேண்டுமென்றார். (அண்ணாதுரை, 1985) இதற்கான புதிய திட்டங்களை வகுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். இக்கருத்துக்கு முரணாக இருந்த, "குலக்கல்வித் திட்டத்தை" (1953) வேண்டாமென்று எதிர்த்தார். வளர்கின்ற சமுதாயத்திற்கேற்ப கல்விமுறை அமையவேண்டுமென்றார். ஏழை எளிய மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காகக் கல்வி உதவித் தொகையும், புத்தகங்களும், சீருடைகளும் அளித்தார். கல்லூரிக்கல்வி வரை இலவசக் கல்வி, இடைநிலைக் கல்வியில், மைய மதிப்பீடு முறையை நடைமுறைப்படுத்தினார். பார்வையற்ற மாணவர்களுக்காகப் பிரெயில் முறையில் புத்தகங்களைத் தயாரிக்கத் தனியாக அச்சகம் ஒன்றை ஏற்படுத்தினார்.

## எளியோருக்கு இலவசக் கல்வி

பேரறிஞர் சி. என். அண்ணாதுரை பி.ஏ., (ஆனர்ஸ்) பட்டம் பெற்றதும் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருள் வசதி இன்மையால், மூன்று தினங்களுக்கு மேல் சட்டப் படிப்பைத் தொடர முடியவில்லை (Annadurai, 1962) கல்விபெற, ஏழ்மை யாருக்கும் தடையாக இருக்கக்கூடாது என்று உணர்ந்தவர், தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதும் ஏழைகளுக்கு புகுமுகக் கல்வி வரை இலவசக் கல்வி பெற (1967) ஆணைப் பிறப்பித்தார் இச்செயல் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் கல்லூரிக் கல்வி பெற வேண்டுமென்ற அவரது எண்ணத்தை வெளிக்காட்டுகிறது (Chokkan, 2007).

பாமரமக்கள் உயரவேண்டுமென்றால், அவர்களுடைய சூழ்நிலையைச் செம்மைப்படுத்த வேண்டும். சூழ்நிலையைச் செம்மைப்படுத்த வேண்டுமெனில் அவர்களுக்குத் தரமான இலவசக்கல்வி

அளிக்கப்படவேண்டுமென்று கருதினார். எனவேதான், பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தும்போது, 'பல்கலைக்கழகம் பாமரனையும் கணக்கில் கொள்ளவேண்டும்'. ஏனெனில், இது பாமரனின் காலம்" என்று குறிப்பிட்டார் (Moorthy,1997). மேலும், தமிழ்ப் புலவர்களில் பெரும்பாலோர், தமிழின் துணைகொண்டு 'விஞ்ஞானம்' பற்றிப் பாமரமக்களிடையே பேசவேண்டுமென்பது தன் (Annadurai, 1985). என்பதை வெளிப்படுத்தினார். மாணவர்கள் கல்வி பெறுவது மக்கள் நிம்மதியாய் வாழவும் அவர்களுடைய பிற்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வுக்கு வழிவகை செய்யவுந்தான். இதன்மூலம் எளியோர் கல்வி பெறுவதில், அவர் காட்டிய அக்கறையை அறியமுடிகிறது.

## முதியோர் கல்வியும் - பெண் கல்வியும்

பெண்கல்வி மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர், 1931-இல் 'பெண்கள் சமத்துவம்' என்ற கட்டுரையை எழுதினார். சமூகப் பணிகளில் அனைத்தையும் அரசாங்கமே செயல்படுத்திக் கொண்டிருக்க முடியாது என்று கருதிய பேரறிஞர் சி. என். அண்ணாதுரை ஆயிரம் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து 'சீரணிப்படை' ஒன்றை அமைத்தார். இவர்களின் மூலமாகத் தமிழகத்தில் மூலைமுடுக்குகளிடையே சுற்றுப்புறத்தூய்மை விழிப்புணர்வு, பெண்கல்வி விழிப்புணர்வு மற்றும் முதியோர் கல்வியைச் சிறப்பாகச் செயற்படுத்தினார் (Chokkan, 2007).

## மதச்சார்பற்ற கல்விக்கூடங்கள் தேவை

"ஏழைக்கு எழுத்தறிவிக்கும் பணியே, பணிகளிலே சிறந்த பணி" என்று பேரறிஞர் சி. என். அண்ணாதுரை குறிப்பிடுவார். "ஆனால், நாட்டிலே பணம் படைத்த சீமான்கள் தங்கள் உள்ளத்திலே தர்மத்தைப் பற்றி நினைக்கிற அளவுக்குக் கல்வி நிலையைப் பற்றி நினைப்பதில்லை, அரசும் கல்விக்குப் பணமில்லையென்று கைவிரித்துவிட்டு, பழைய கோயில்களைப் புதுப்பித்து, விக்கிர பிரஷ்டைகள் செய்து, புதுக்கோயில் கட்ட லட்சக்கணக்கில் செலவிடுகிறது" (Annadurai, 1995). இப்படி மதச்சார்புள்ள சர்க்கார், கல்வி நிலையங்களை ஏற்று நடத்துமானால் மனிதனின் சிந்தனைச் சக்திக்கு அங்கே இடமிருக்காது என்று சுட்டிக்காட்டினார் (Annadurai, 1995).

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, வெளிவரும் வரை அவர் எந்த இயக்கத்தோடும் இணைந்து செயல்படவில்லை. 1932-இல் கல்லூரி மாணவர் கழகச் செயலாளராக இருந்தபோதும், பேரறிஞர் சி. என். அண்ணாதுரையின் முழுக்கவனமும் படிப்பில்தான் இருந்து இருக்கிறது என்பதை, அறியமுடிகிறது (Chokkan, 2007). அப்பொழுது மாணவராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி எழுதிய, 'இளமைப்பலி' கட்டுரையைப் படித்து வியந்த பேரறிஞர் சி. என். அண்ணாதுரை, திருவாரூர் பொதுக்கூட்டத்திற்கு சென்றிருந்தபோது கலைஞரை நேரில் அழைத்துப் பாராட்டியதோடு, 'படிப்பில் முதலில் கவனம் செலுத்து பாக்கி விடயங்களை பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று அறிவுறுத்தினார் (Manickavasagam, 1969). அந்நாட்களில், மாணவர்கள் அரசியல் தொடர்பின்றிப் பணியாற்ற 'திராவிடர் மாணவர் பேரவை' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். எவரிடமும் பகைமை பாராட்டாத பண்பு, பேரறிஞர் சி.என். அண்ணாதுரையின் தனிச்சிறப்பு. எனவேதான், அவர் 'கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு' என்று கூறி, மாணாக்கர்களைச் சீர்படுத்தினார். பட்டமளிப்பு விழாவில் பேசும்போது, 'தமிழ் உமது முரசமாகட்டும், பண்பாடு உமது கவசமாகட்டும், அறிவு உமது படைகளாகட்டும், அறநெறி உமது வாழ்க்கைத் துணையாகட்டும்' என்று கூறி மாணாக்கரைப் பண்படுத்தினார். நீங்கள் கல்வி பெறுவது உங்களுக்காக மட்டுமல்ல, இந்த சமுதாயத்திற்காகவும் என்பதை உணர்ந்து செயல்படுங்கள் என்றார்.

## முடிவுரை

தனிமனித மேம்பாட்டிற்காகவும், ஒருநாட்டின் சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு சிந்தனைகளை அளித்தவர். கல்வியால் சமூக இருளைப்போக்கி, சிறந்த ஒளிமிக்க நாடாக விளங்க வைக்கமுடியும் என்னும் அவரது சிந்தனையை இக்கட்டுரையில் கண்டறிய முடிகிறது.

## References

Annadurai, C.N., (1962) Irulakala, Anna Peravai Veliyeedu, Chennai, India.

Annadurai, C.N., (1985) Annavin Samuthaya Puratchi, Abirami Pathippagam, Chennai, India.

Annadurai, C.N., (1995) AariyaMaayai, Kannammal Pathippagam, Chennai, India.

Chokkan, N., (2007) Annanthu Paar, Kizhakku Pathippagam, Chennai, India.

Manickavasagam, G., (1969) Perarignar Dr.C.N. Annadurai, Aruna Pathippagam, Madurai, India.

Moorthy, A.K., (1997) Arinar Annavin Metaitamil, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License